**கவனிக்க**.-2020.08.21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2191 - 2020 අගෝස්තු මස 28 වැනි සිකුරාදා - 2020.08.28

*2191 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1002 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 996 | ஏல விற்பனைகள் | 1008 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1001 | நானாவித அறிவித்தல்கள் | - |

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

995-B 82053-405 (2020/ 08)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் - கல்முனை

நீதிமன்ற சான்றுப் பொருட்கள் ஏல விற்பனை

கல்முனை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் எதிர்வரும் 2020.09.01ஆந் திகதி காலை 9.30 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இப் பொருட்களுக்காக உரிமை கோருபவர்கள் எவருமிருந்தால் ஏல விற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.

2. பொது மக்கள் எவரும் இந் நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட பொருட்களை ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

3. பொருட்களை விலைவைத்து வாங்குவோர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டை கொண்டு வருதல் வேண்டும்.

4. பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தைச் செலுத்தி உரிய பொருட்களை இந்நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டும்.

5. சகல கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. இப்பொருட்களில் எவற்றுக்கேனும் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் விற்பனையிலிருந்து மீளப் பெறுவதற்கு இந்நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு.

ஐ.என்.றிஸ்வான்,
நீதிவான் .

நீதிவான் நீதிமன்றம்,
கல்முனை.

பகிரங்க ஏல விற்பனை பொருட்கள் விபரம்- 2020.09.01

| தொ. இல. | வழ. இல. | சான்றுப் பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 96071/CAA | சாரம் | 10 |
| 2. | 95652/CAA | சாரம் | 01 |
| 3. | 95653/CAA | காலுறை | 01 |
| 4. | 95644/CAA | கையடக்கத் தொலைபேசி சாஜர் | 01 |
| 5. | 96134/CAA | பிரேக் ஒயில் – 500 மில்லி லீற்றர் | 01 |
| 6. | 96136/CAA | மோட்டார் வாகன உதிரிப்பாகம் | 01 |
| 7. | 95395/CAA | மோட்டார் வாகன உதிரிப்பாகம் | 01 |
| 8. | 95402/CAA | அடப்பர் (USB) | 01 |
| 9. | 95956/CAA | தலைக்கவசம் | 01 |
| 10. | 95392/CAA | கூரை ஒழுக்கை அடைப்பு | 01 |
| 11. | 95405/CAA | சிறிய கைப்பை (பெண்) | 01 |

| இல. | வழ. இல. | சான்றுப் பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 12. | 95717/PC | பெரிய அலுமினிய முட்டி | 01 |
| 13. | 95717/PC | சிறிய அலுமினிய முட்டி | 01 |
| 14. | 95777/PE | பெரிய அலுமினிய முட்டி (பெரியது) | 01 |
| 15. | 95777/PE | சிறிய அலுமினிய முட்டி | 01 |
| 16. | AR/40 | கையடக்கத் தொலைபேசி (இ டெல் வர்க்கம்) | 13 |
| 17. | No Number | பற்றரி சார்ஜர் ( பழுதடைந்தது) | 01 |
| 18. | No Number | எலக்ரிக் ரீல் | 01 |
| 19. | No Number | கம்பித் துண்டுகள் | |
| 20. | No Number | சுவர்ப்பைப் (குளியலறை) | 01 |
| 21. | No Number | வெண்கலக் குத்து விளக்கு | 01 |
| 22. | No Number | பீங்கான் | 12 |
| 23. | No Number | சில்வர் பீங்கான் | 04 |
| 24. | No Number | சுவர்க்கடிகாரம் (பழுதடைந்தது) | 01 |
| 25. | No Number | அம்பிளிவயர் (பழுதடைந்தது) | 01 |
| 26. | No Number | நுணுக்குக் காட்டி | 01 |
| 27. | No Number | கை ரில் | 01 |
| 28. | 95812 | பிளாஸ்ரிக் கலன் | 03 |
| 29. | 95956 | சிறிய கலன் | 01 |
| 30. | 95008 | பணம் அளவிடும் கருவி | 01 |
| 31. | 94903/MISC | இலத்திரனியல் தராசு | 01 |
| 32. | 95206 | தராசு | 01 |
| 33. | No Number | தராசு | 01 |
| 34. | No Number | தராசு | 01 |
| 35. | No Number | ரேடியோ ( பழுதடைந்தது) | 01 |

| இல. | வழ. இல. | சான்றுப் பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 36. | No Number | பலகை சிறிய கதவுகள் -02 | 01 |
| 37. | 93108 | துவிச்சக்கர வண்டி ( பழுதடைந்தது) | 01 |
| 38. | 95557/MT | துவிச்சக்கர வண்டி | 01 |
| 39. | AR/83 | துவிச்சக்கர வண்டி | 03 |
| 40. | AR/1456 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 41. | AR/38 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 42. | AR/1282 | துவிச்சக்கர வண்டி | 01 |

8- 582

---

**நீதிவான் நீதிமன்றம் - சாவகச்சேரி**

சான்றுப் பொருட்கள் ஏல விற்பனை

பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான கீழ்க் காணும் பொருட்கள் 2020.09.05 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் ஏல விற்பனை செய்யப்படும்.

1. குறிப்பிட்ட ஏதாவது பொருட்கள் சம்பந்தமாக உரிமை கோருபவர்கள் இருப்பின் ஏலவிற்பனைக்கு குறிப்பிட்ட தினத்தில், ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு முன்னர் உரிமைக் கோரிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. பதிவாளரின் அனுமதி பெற்று ஏலவிற்பனை ஆரம்பமாவ தற்கு முன்னர் ஏலவிற்பனைக்கென குறிப்பிட்ட பொருட்களைப் பார்வையிடலாம்.

3. நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் தகுந்த தொகையானது விற்பனையின் போது ஏற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் மன்றின் விருப்புரிமையின் பிரகாரம் அப்பொருட்களை ஏல விற்பனையில் இருந்து நீக்கிவிடுவதற்கான உரித்தை மன்று கொண்டுள்ளது.

4. ஏல விற்பனையின் போது ஏலத்தில் வாங்கப்பட்ட பொருட்கள் உடனடியாகப் பணம் செலுத்தப்பட்டு நீதிமன்ற வளாகத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5. பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டையை கொண்டு வருதல் அவசியமானதாகும்.

ஜே. கஜநிதிபாலன்,
மவாட்ட நீதிபதி/ நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
சாவகச்சேரி.

| | வழக்கு இல. | துவிச்சக்கர வண்டி இலக்கம் | |
|---|---|---|---|
| 1. | 22439 | 55679405 | லுமாலா ஆண்கள் |
| 2. | 24454 (B472/17) | 69648024 | லுமாலா பெண்கள் |
| 3. | 23769 (B336/12) | 69957925 | லுமாலா பெண்கள் |
| 4. | 24309 (B357/17) | 1A00015 | லுமாலா பெண்கள் |
| 5. | 20842 (B182/16) | | இல.12 சிறிய துவிச்சக்கர வண்டி |
| 6. | AR/87/18 | 69929400 | லுமாலா ஆண்கள் |
| 7. | 22291 (B/433/16) | 69883509 | லுமாலா ஆண்கள் |
| 8. | 17631 (B/420/14) | — | லுமாலா ஆண்கள் |

| வழக்கு இல. | | துவிச்சக்கர வண்டி இலக்கம் |
|---|---|---|
| 9. 22391 (B/441/16) | 5718J052 | லுமாலா ஆண்கள் |
| 10. 21873 (B407/16) | 55761368 | லுமாலா பெண்கள் |
| 11. 23336 (B362/16) | SK100333 | லுமாலா ஆண்கள் |
| 12. 22436 | 137912 | அட்லஸ் ஆண்கள் |
| 13. 21650 (B/291/16) | ECC3802 | பெண்கள் |
| 14. 22615 (B/290/16) | LA 01884 | லுமாலா பெண்கள் |
| 15. 18882 (B/280/14) | — | மூன்று சில்லு சைக்கிள் |
| 16. 21042 | 55907313 | லுமாலா ஆண்கள் |
| 17. 24036 (B/270/16) | 55553625 | லுமாலா ஆண்கள் |
| 18. 18514 (B/297/l 5) | BHL-00727 | லுமாலா பெண்கள் |
| 19. 19980 (B251/15) | ALU9U858 | லுமாலா ஆண்கள் |
| 20. 22420 | 69810125 | லுமாலா ஆண்கள் |
| 21. 20354 (B 153/16) | — | லுமாலா ஆண்கள் |
| 22. AR/32/18 | 55706056 | லுமாலா பெண்கள் YA40470098 DYNO Victory |
| 23. AR/359/18 | 36071969 | லுமாலா பெண்கள் |
| 24. AR/57/18 | 24031014 | லுமாலா பெண்கள் |
| 25. AR/360/18 | 69748238 387347 Asia Speacil ஆண்கள் | லுமாலா பெண்கள் |

*8-618*

---

**சுற்றுலா நீதிவான் நீதிமன்றம் - களுவாஞ்சிக்குடி**

*பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்*

*களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட ஆற்று மணல் 22 கியூப்கள் மற்றும் ஊத்த மண் 64.5 கியூப் என்பன 2020.09.01 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.*

*இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும்.*

*இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.*

*இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறபப்படுத்தப்படல் வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.*

*ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்ப தாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்த வித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.*

*ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.*

கே. ஜீவராணி,
மேலதிக நீதிவான், சுற்றுலா
நீதிவான் நீதிமன்றம்,
களுவாஞ்சிக்குடி.

*நீதிவான் நீதிமன்றம்,*
*மட்டக்களப்பு,*
*2020, ஓகத்து 10.*

*8- 622*

## மாவட்ட /நீதிவான் நீதிமன்றம் - முல்லைத்தீவு

நீதிமன்றில் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் ஏல விற்பனை 01-2020

01. முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் அரசுடமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் 2020.09.05 ஆந் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

02. குறிப்பிட்ட மோட்டார் வாகனங்கள் தொடர்பாக உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் ஏல விற்பனைத் தினத்தில் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு முன்னர் உரிமைக் கோரிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

03. பதிவாளரின் அனுமதி பெற்று ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் ஏல விற்பனைக்கென குறிப்பிட்ட மோட்டார் வாகனங்களை பொது மக்கள் பார்வையிடலாம்.

04. நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் தகுந்த தொகையானது விற்பனையின் போது ஏற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் மன்றின் விருப்பு உரிமையின் பிரகாரம் அப்பொருட்களின் ஏல விற்பனையிலிருந்து நீக்கி விடுவதற்கான உரித்தை மன்று கொண்டுள்ளது.

05. ஏல விற்பனையின் போது ஏலத்தில் வாங்கப்பட்ட பொருட்களுக்கு உடனடியாக பணம் செலுத்தப்பட்டு நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். மேலும் எல்லாக் கொடுப்பனவுகளும் பணமாக செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

06. பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

செ.லெனின்குமார்,
மாவட்ட நீதிபதி/நீதிவான்,

மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்,
முல்லைத்தீவு.

பதிவு செய்யக்கூடிய மோட்டார் வாகனங்களின் விபரங்கள்

| தொ. இல. | வழக்கு இல. | வாகன இல. | வாகன விபரம் |
|---|---|---|---|
| 1. | B/ 744/18 | NPLD-6041 | மஹேந்திரா வாகனம் |
| 2. | B/ 830/18 | NPBFT-0782 | மோட்டார் சைக்கிள் |
| 3. | B/ 955/18 | NPXK-0489 | மோட்டார் சைக்கிள் |
| 4. | B/ 1062/18 | NPBER-6041 | மோட்டார் சைக்கிள் |
| 5. | B/ 1325/18 | NPPV-3471 | (TATA) வாகனம் |
| 6. | AR/ 124/19 ( B/ 168/ 19) | WPVV-2219 | மோட்டார் சைக்கிள் |
| 7. | AR/ 130/19 | NPBCB-9458 | மோட்டார் சைக்கிள் |
| 8. | 6140 | RC -1835 | உழவு இயந்திரம் |
| 9. | 21278 | NPRB-8001 | உழவு இயந்திரம் |
| 10. | 26804 | NPUT-0003 | மோட்டார் சைக்கிள் |
| 11. | 28674 | BGM-7182 | மோட்டார் சைக்கிள் |
| 12. | 28978 | NPXY-2943 | மோட்டார் சைக்கிள் |
| 13. | 29342 | NPXR-7818 | மோட்டார் சைக்கிள் |
| 14. | 29686 | NPWL- 0720 | மோட்டார் சைக்கிள் |
| 15. | 30170 | NPBBU-0204 | மோட்டார் சைக்கிள் |
| 16. | 32019 | NPBDM-8265 | மோட்டார் சைக்கிள் |
| 17. | 32598 | NPBFL-2826 | மோட்டார் சைக்கிள் |
| 18. | 34345 | NPBFS-1617 | மோட்டார் சைக்கிள் |
| 19. | 33467 | EPTM-7342 | மோட்டார் சைக்கிள் |

உதிரிப்பாகங்களுக்கான மோட்டார் வாகனங்களின் விபரங்கள் (இரும்பு)

| தொ. இல. | வழக்கு இல. | வாகன இல. | வாகன விபரம் |
|---|---|---|---|
| 1. | B/ 191/14 | N/A | மோட்டார் சைக்கிள் |
| 2. | B/ 763/17 | NWTJ-0368 | மோட்டார் சைக்கிள் |
| 3. | 37515 B/ 389/18 | N/A | கையுழவு இயந்திரம் |
| 4. | B/ 1225/18 | N/A | அபான்ஸ் முச்சக்கர வண்டி |
| 5. | AR/ 131/19 | 148-5712 | மோட்டார் சைக்கிள் |
| 6. | ( B/ 168/ 19) AR/ 124/19 | 500- 7048 | மோட்டார் சைக்கிள் |
| 7. | B/ 255/19 | N/A | கையுழவு இயந்திரம் |
| 8. | B/ 307/19 | NPHD -2742 | மோட்டார் சைக்கிள் |
| 9. | B/ 308/19 | NPJB-6381 | மோட்டார் சைக்கிள் |
| 10. | AR/ 374/19 | NPMP-0333 | மோட்டார் சைக்கிள் |
| 11. | 3654 | N/A | கையுழவு இயந்திரம் |
| 12. | 6140 | N/A | உழவு இயந்திரப் பெட்டி |
| 13. | 9243 | N/A | மோட்டார் சைக்கிள் |
| 14. | 21091 | N/A | மோட்டார் சைக்கிள் |
| 15. | 21278 | RW-0701 | உழவு இயந்திரப் பெட்டி |
| 16. | 29189 | N/A | அபான்ஸ் முச்சக்கர வண்டி |
| 17. | 30345 | N/A | உழவு இயந்திரப் பெட்டி |
| 18. | 30504 | N/A | உழவு இயந்திரப் பெட்டி |
| 19. | 31795 | N/A | அபான்ஸ் முச்சக்கர வண்டி |
| 20. | 31889 | WL-7649 | மோட்டார் சைக்கிள் |
| 21. | 33277 | NPBCJ-1071 | மோட்டார் சைக்கிள் |
| 22. | 33382 | EPTD-3112 | மோட்டார் சைக்கிள் |
| 23. | 34277 | NP BEL-4502 | மோட்டார் சைக்கிள் |

8- 701

# ஆய விற்பனையும் குத்தகையும்

## *2021 ஆம் ஆண்டுக்காக கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை*

### திவுலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவு

*2021ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள திவுலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் கள்ளுத்தவறணைகளில் பதப்படுத்தப்பட்ட கள்ளை சில்லறை விலைக்கு விற்பனை செய்யும் பூரண அதிகாரத்தைக் கொள்வனவு செய்வதற்காக 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள விற்பனை நிபந்தனைகளுக்கும் கீழ்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்ட வகையில் 2020.09.28ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.*

*கள்ளுத் தவறணை குத்தகையைப் பெற்றுக்கொள்ள முன்வருவோர் உரிய கேள்விப்பத்திரப் படிவமொன்றை முறையாக நிரப்பி கீழே காட்டப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைப் பட்டியலில் விதிக்கப்பட்டுள்ள விலைமனுப் பணத்தைக் கொடுப்பனவு செய்து பெற்றுக்கொள்ளப்படும் பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டொன்றையும், பிரகடனப்படுத்தப்பட்ட குத்தகை நிபந்தனைகளுக்கமைய பெறப்பட்ட சொத்துச் சான்றிதழொன்றையும் உள்ளடக்கியதாக இலச்சினை பொறிக்கப்பட்ட கடித உறையொன்றில் இட்டு அதன் இடப்புற மேல் மூலையில் தம்மால் விலைமனுச் செய்யப்படுகின்ற தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி ஒவ்வொரு தவறணைக்குமென இங்கே காட்டப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் பதிவுத்தபாலின் மூலம் அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலம் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்குக் கிடைக்கச்செய்ய முடியும்.*

*கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்பவர் கேள்விப்பத்திரத்தை நிரப்புகையில் கேள்விப்பத்திரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு திருத்தத்தையும் தமது கையொப்பத்தின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.*

*கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதித் தினமான 2020.09.28 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விப்பத்திரதாரர்களும் பிரதேச செயலகத்திற்கு வருகை தரல் வேண்டும்.*

*எவ்வித தகவல்களையும் உள்ளடக்காத கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் உரிமை திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்கு உண்டு.*

*மேற்குறித்த தினத்தில் விற்பனை செய்ய முடியாமல் போகின்ற கள்ளுத் தவறணையின் மீள் விற்பனை 2020.11.27 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மேற்கொள்ளப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தலும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக அமைந்திருத்தல் வேண்டும்.*

*இச் சலுகையைக் கொள்வனவு செய்பவர் தொடர்பாக பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னர், அவ்வாறு பிரகடனம் செய்யப்பட்ட தினத்தன்று அதாவது குத்தகை விற்பனைத் தினம் பி.ப. 2.00 மணிக்கு முன்னர் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற நிதியில் இரண்டு மாதங்களுக்கான குத்தகைப் பணத்தினைவிட அதிகமான ஒரு தொகையை பிணையாகச் செலுத்தி தவறணை தொடர்பான நிபந்தனைகளுக்குக் கைச்சாத்திடல் வேண்டும்.*

*கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கின்றபோது அறிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களிருப்பின், அவற்றை திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.*

*யூ. டபிள்யூ. ரீ. யூ. ராஜகருணா,*
*பிரதேச செயலாளர்,*
*திவுலப்பிட்டிய.*

*பிரதேச செயலகம்,*
*திவுலப்பிட்டிய,*
*2020, ஓகத்து 12.*

**அட்டவணை**

| இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 27 - தாகொண்ண | திவுலப்பிட்டிய | தாகொண்ண | முற்பகல் 11.00 பிற்பகல் 5.00 | பிற்பகல் 2.00 பிற்பகல் 8.00 | 4,000 | 2020.09.28 முற்பகல் 10.30 |

8-688

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## கம்பனியின் பெயரை மாற்றுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.-

கம்பனியின் தற்போதைய பெயர் : இன்டர் நெஷனல் இன்ஸ்டிடியுட் ஒப் போஸ்ட் கிரஜிவேட் ஸ்டடீஸ் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனி பதிவு இல. : பீவீ 00206606
பதிவு அலுவலகம்: இல.654/5, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கண்டி
கம்பனியின் பிரேரிக்கப்பட்ட பெயர்: கிரஜுவேட் அசோசியேட் புரொப்பெஷனல் (பிரைவட்) லிமிட்டட்

கம்பனிச் செயலாளர்கள்.

8- 530

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : அர்டேஸ் டெக்னீ (பிறைவட்) லிமிடெட்
பதிவு அலுவலகம்: இல.38, 2 ஆம் ஒழுங்கை, மாதிரி நகரம், இரத்மலானை
பதிவு இலக்கம் : பீவீ 00224750

கம்பனிச் செயலாளர்.

8- 549

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் சிப்லா பார்மா லங்கா (பிரைவட்) லிமிட்டட் பீவீ 100158 மற்றும் பிரீத்பிறீ லங்கா ( பிரைவட்) லிமிட்டட் பீவீ 99128 ஆகியன ஒருங்கிணைக்கப்பட்டமையை இத்தால் அறியத்தருகின்றோம்.-

ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியின் பெயர் : பிரீத்பிறீ லங்கா (பிரைவட்) லிமிட்டட்
திகதி: 2020.05.01

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டட்

கம்பனிச் செயலாளர்கள்.

8- 581

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் :ஃபெலிசிட்டி என்ஜினியரிங் (பீவிடீ) எல்டீடி
பதிவு முகவரி: 55, தொடம்வல பெசேஜ், அஸ்கிரிய, கண்டி
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2020.08.07
பதிவிலக்கம் : பீவீ 00225602

பணிப்பாளர்கள்.

8- 587

**அறிவித்தல்**

மேல் மாகாண (கொழும்பு - சிவில்) வர்த்தக உயர் நீதிமன்றத்தின்
வழக்கு இலக்கம் CHC/ 58/ 2018/ CO
சன்பீ ஜீன்ஸ் கோப்பரேசன் (பிரைவேட்) லிமிட்டட்
(கலைப்பில் உள்ளது)
கம்பனியின் பதிவு இல. PV 13051
கடன்கொடுத்தோர் , கடன்பட்டோர் மற்றும் பங்குதாரர்களுக்கான அறிவித்தல்

G.J. David ஆகிய நான், 2020, பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி முதல் மேற்படி கம்பனியின் கலைப்பாளர் பொறுப்பிலிருந்து விலகியுள்ளேன் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

G.J. David.
Levl 03,No.11, Castle Lane.
Colombo 04.

8- 652

---

**மோர்கன்டைல் எமறல்ட் ஷிப்பிங் (பிரைவேட்) லிமிட்டட்**
**(கடன்கொடுத்தோர் தன்னிச்சையான ஒடுக்குதல்)**
**கம்பனியின் பதிவு இல.- PV 61508**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1) இன் கீழான கலைப்பாளர்கள் நியமனம் பற்றிய அறிவித்தல்

கொழும்பு 15, அளுத்மாவத்தை வீதி, இல. 108 இல் அமைந்துள்ள மோர்கன்டைல் எமறல்ட் ஷிப்பிங் (பிரைவேட்) லிமிட்டட் எனும் கம்பனியின் கடன்கொடுத்தோரின் 2015, ஆடி 23 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தல் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக மேற்படி கம்பனியின் கலைப்பாளராக இல. 11, 3 ஆம் மாடி, காசல் ஒழுங்கை, கொழும்பு 4 ஐச் சேர்ந்த ஜெராட் ஜீவானந்தன் டேவிட் ஆகிய நான், நியமிக்கப்பட்டுள்ளேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

ஜெராட் ஜீவானந்தன் டேவிட்,
கலைப்பாளர்.
மோர்கன்டைல் எமறல்ட் ஷிப்பிங்
(பிரைவேட்) லிமிட்டட்.

Level 3, No.11,
Castle Lane,Colombo- 4.
2020.08.12.

8- 653

---

**வொறொன்ரியர் ஓட்டோமோட்டிவ் (பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனியின் பதிவு இல.PV 11389**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பெயர் : வொறொன்ரியர் ஓட்டோமோட்டிவ் (பிரைவேட்) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல.65, கிருள வீதி, கொழும்பு 5
நீதிமன்றம்: வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல.: 84/2019/CO
கம்பனி கலைப்பாளர் பெயர்:Gerard Jeevananthan David
முகவரி: Level 3, No. 11, Castle Lane,Colombo 4
நியமனத் திகதி: 2020.01.24

8- 654/1

---

**வொறொன்ரியர் ஓட்டோமோட்டிவ் (பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனியின் பதிவு இல.PV 11389**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழான கம்பனி கலைப்பு பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பெயர் : வொறொன்ரியர் ஓட்டோமோட்டிவ் (பிரைவேட்) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல.65, கிருள வீதி, கொழும்பு 5
நீதிமன்றம்: வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல.: 84/2019/CO
நீதிமன்ற கட்டளைத் திகதி : 2020.01.24
கோரிக்கை தாக்கல் செய்த திகதி : 2019.11.14
கம்பனி கலைப்பாளர் பெயர்:Gerard Jeevananthan David
முகவரி: Level 3, No. 11, Castle Lane,Colombo 4

8- 654/2

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : காமினி டுவர்ஸ் என்ட் டிரவல்ஸ் (பீவீஉ) எல்டீஎ
பதிவிலக்கம் : PV 00203930
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018, செத்தெம்பர் 8
பதிவு முகவரி: இல.23/5, நயில் நிவச, போத்தலே, இஹலகம, அம்பேபுஸ்ஸ

பணிப்பாளர் சபை.

8- 659

## திருத்தம்

2020, ஓகத்து 14 ஆந் திகதிய, 2189 ஆம் இலக்க இலங்கைச் சனநாயாக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I: தொகுதி (IIஆ) விளம்பரங்கள் பகுதியில் உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 8-396ஆம் இலக்க அறிவித்தல் பின்வருமாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

## அறிவித்தல்

ஃபோசைட் இன்சூரன்ஸ் அண்ட் ரீ இன்சூரன்ஸ் புரோகர்ஸ் (பிறைவட்) லிமிடட் (PV79724) அண்ட் ஃபின்லே இன்சூரன்ஸ் (புரோகர்ஸ்) பிறைவட் லிமிடட் (PB 51 PV) லிமிடட் ஆகிய நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்

ஃபோசைட் இன்சூரன்ஸ் அண்ட் ரீ இன்சூரன்ஸ் புரோகர்ஸ் (பிறைவட்) லிமிடட் மற்றும் ஃபின்லே இன்சூரன்ஸ் (புரோகர்ஸ்) பிறைவட் லிமிடட் ஆகிய நிறுவனங்கள் ஒருங்கிணைக்கப்படுவதாகவும் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் ஃபின்லே இன்சூரன்ஸ் (புரோகர்ஸ்) பிறைவட் லிமிடட் ஆவதுடன் குறித்த ஒருங்கிணைப்பு செயற்பாடுகள் 2019, திசெம்பர் 01 ஆந் திகதி முதல் கொண்டு அமுலுக்கு வந்துள்ளது. ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனத்தின் பதிவுபெற்ற முகவரி இல. 186, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2, இலங்கை.

சபையின் கட்டளைக்கு அமைய,

நிறுவனத்தின் செயலாளர்.

8- 715

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் நாம் யாவரும் தெரிவித்துக் கொள்வது யாதெனில், 2013ஆம் ஆண்டு யூன் மாதம் பதினெட்டாம் திகதியன்று இலங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திருவாளர் ஜே. எஸ். ஏ. மதுரநாயகம் அவர்கள் முன்னிலையில் பிரான்ஸ் ரோர்ஸி, இலக்கம் 77200, நெப்ரியூன் சதுக்கம் இலக்கம் 5 னை ( 5Neptune square 77200 Torcy France) வதிவிடமாகக் கொண்ட வேலாயுதம் அருமைநாயகம் மற்றும் எனது மனைவி அருள்மொழி அருமைநாயகம் ஆகியோருடன் கந்தையா தையல்நாயகி ஆகிய நாம் மூவருமாக இணைந்து எங்கள் சார்பாக உண்மையானதும் சட்டப்படியுமான அற்றோணித் தத்துவகாரராக செயற்பட்டு எங்களது அலுவல்கள் மற்றும் ஆதனம் சம்பந்தமான பணிகளை கவனிப்பதற்காக இலக்கம் 925 ஐக் கொண்ட சிறப்பு அற்றோணித்தத்துவம் ஒன்றினை நிறைவேற்றியும் அத்தாட்சிப்படுத்தியும் இருந்தோம்.

இப்பொழுது நாம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசினதும் பொது மக்களினதும் கவனகத்திற்குச் சித்த சுவாதீனத்துடனும் தெரிவித்துக் கொள்வது யாதெனில் நாம் அவ்வாறு வழங்கிய சிறப்பு அற்றோணித்தத்துவத்தை இல்லாதாக்கி இரத்துச் செய்கின்றோம் என்பதனையே. இதன் காரணமாக குறித்த சிறப்பு அற்றோணித்தத்துவத்தின் மூலம் இலங்கை, மானிப்பாய், நவாலி வடக்கைச் சேர்ந்த இராசதுரை ஜோன் றஜீவ் ( அடையாள அட்டை இலக்கம் 791784743 V) என்பவருக்கும் அவரது மனைவியாகிய தமிழினி ஜோன் றஜீவ் ( அடையாள அட்டை இலக்கம் 838484417V) ஆகிய இருவருக்கும் எம்மால் வழங்கப்பட்ட தத்துவத்தையும் அதிகாரத்தையும் கைவாங்கிக் கொள்வதுடன் குறித்த சிறப்பு அற்றோணித்தத்துவம் இத்தால் நிறைவுக்குக் கொண்டு வரப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் திகதியிலிருந்து குறித்த அந்த சிறப்பு அற்றோணித் தத்துவத்திற்கு எவ்விதமான சட்ட வலுவோ பிணிப்பொ இருக்க மாட்டாது என்பதையும் தெரியப்படுத்துகிறோம்.

குறித்த இந்தச் சிறப்பு அற்றோணித் தத்துவம் யாழ்ப்பாணம் வட பிராந்தியத்திற்கான உதவிப் பதிவாளர் நாயகத்தினது அலுவலகத்தின் எழுத்திலான அதிகாரங்களின் நாட் பதிவேடு இலக்கம் 1914/24. 06. 2013 இன் கீழ் தொகுதி/இருமடி 70/24 இன் கீழ் பதியப்பட்டுள்ளது.

இதற்கத்தாட்சியாக நாங்கள் எமது கையொப்பங்களை 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் திகதியாகிய இன்று ஒப்பமிட்டுள்ளோம்.

வேலாயுதம் அருமைநாயகம்,
அருள்மொழி அருமைநாயகம்,
கந்தையா தையல்நாயகி.

8-529

---

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இஸ்ராயேல் அடெம்ஸ் பமிலி, 118, ஜபோடின்ஸ்கி, ரமாத் கத், 5241226 எனும் முகவரியில் வசித்தவரும், தற்போது பிலியந்தலை, ஜாலியகொட, இல. 31 இல் வசிப்பவருமான கட்டுவாவல போரகே தோன சந்தியா சமன்மலி (தே.அ.அ.இல. 735070126V) ஆகிய நான், எனது அற்றோணித் தத்துவகாரராக, பிலியந்தலை, ஜாலியகொட, இல. 31 இல் வசிக்கும் கட்டுவாவல போரகே தோன மானெல் புஷ்பகுமாரி என்பவரை 2018.01.08ஆந் திகதி இஸ்ராயேலின் இலங்கைச் தூதுவர், இரண்டாம் செயலாளர், சமாதான நீதவான், திரு. கே. ஜீ. ஹேமச்சந்திர அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட விசேட அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது. எனவே, மேற்படி அற்றோணிதத்துவத்தின் மூலம் அற்றோணித் தத்துவகாரருக்கு வழங்கப்பட்ட அதிகாரம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

கட்டுவாவல போரகே தோன
சந்தியா சமன்மலி.

8-547

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் , 30/5, யோத மாவத்தை, சித்தமுல்லை, பிலியந்தலையில் வசிக்கும், 455783313Vதேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்ட குடலிகமகே விஜயலத்தா ஆகிய நான், அற்றோணிஆவண அதிகாரம் பெற்றவராக நியமிக்கப்பட்டிருந்த நிலையில், கொழும்பு 05, உத்யான புர, இல. 200/22 இல் வசிக்கும் N 2892864 ஆம் இலக்க, இலங்கைக் கடவுச்சீட்டைக் கொண்ட குடலிகமகே கீதாஞ்சன என்கின்ற எனது சகோதரரின் மூலம் Altona Jessie- Mae Bell அமெரிக்காவின் வுட் ப்ரிட்ஜின் பிரபல்யமான நொத்தாரிசினால் 2020, பெப்புருவரி 12 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட விஷேட அற்றோணி அதிகார ஆவணத்தில், அற்றோணி உரிமையாளராகிய குடலிகமகே கீராஞ்சனவின் விருப்பத்தின் படி 2020, யூலை மாதம் 20 ஆந் திகதி முதல் அற்றோணி ஆவணப் பத்திரம் இரத்துச் செய்யப்படும். அத்தினத்திலிருந்து அற்றோணி ஆவணப் பத்திரமோ அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட எந்த நடவடிக்கையோ செல்லுபடியாகாது என இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

குடலிகமகே விஜயலத்தா.

8-551

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் காலி, ஆனந்த மாவத்தை, இலக்கம் 11G என்ற இடத்தில் வதியும் இலக்கம் 511771161V கொண்ட தேசிய அடையாள அட்டைக்கு மற்றும் இலக்கம் J 0339315 கொண்ட கடவுச்சீட்டுக்கும் உரித்துடையவரான விஜேமுனி தொன் சோமரத்ன டி சில்வா ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மற்றும் அதன் சாதாரண மக்களுக்கும் தெரிவித்துக் கொள்வதாவது, காலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ.ஜே.பீ. எம். ஜயவர்தன அவர்களால் 1987 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி எழுதப்பட்டு உறுதி செய்யப்பட்ட இலக்கம் 4634 தாங்கிய அற்றோணித் தத்துவப் பத்திரம் மூலமாக என்னால் எனது அற்றோணித் தத்துவதாரியாக நியமனம் செய்யப்பட்ட காலி, ஹப்புகல, ஆனந்த மாவத்தை, இலக்கம் 11G என்ற இடத்தில் வதியும் விஜயமுனி தோன சிறியானி த சில்வா என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட மேற் சொல்லப்பட்ட இலக்கம் 4634 தாங்கிய அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அதற்கமைய அது நாள் முதல் குறிப்பிட்ட அற்றோணித் தத்துவதாரியால் செய்யப்படும் எந்த ஒரு செய்கையும் செல்லுபடியாகாது என்பதையும் அந்த அற்றோணித் தத்துவம் செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ளதென்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

விஜயமுனி தொன் சோமாரத்ன
டி சில்வா.

8-580

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில், இல. 12-2/10, அலெக்சாண்டர் வீதி, கொழும்பு 06 ஐச் சேர்ந்த குமுதினி நந்திகரன் என்பவர், பிரசித்த நொத்தாரிசு இரட்னம் ரகுராஜ் அத்தாட்சிப்படுத்தியதும் இல. 12-2/ 10 , அலெக்ஸாண்டர் வீதி, கொழும்பு 06 என்ற முகவரியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கோபினாத் எனக்கு வழங்கப்பட்டதுமான இல. 10144 கொண்ட 2019.03.14 ஆந் திகதிய விசேட அற்றோணித் தத்துவத்தை இத்தினத்திலிருந்து இல்லாதொழித்தும் இரத்துச் செய்தும் வறிதாக்கியும் விடுகின்றேன் என இத்தால் பொது மக்களுக்கும் மேற்படி குடியரசின் அரசாங்கத்திற்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

குமுதினி நந்திகரன்.

2020.07.17.

8-606

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், இல. 77/1A, பான்ஸ்பிளேஸ்,கொழும்பு 7 ,தற்போது இல. 19,ஹொஸ்பிட்டல் ரோட், கொன்கோட் வெஸ்ட், NSW 2138 அவுஸ்திரேலியாவில் வசிக்கும் லக்ஷ்மன் குணவர்தன ஆகிய நான், அறிவித்துக் கொள்ளும் விடயம் என்னவெனில், இல. 77/1A, பான்ஸ் பிளேஸ், கொழும்பு07 , தற்போது இல. 19, ஹொஸ்பிடல் ரோட், கொன்கோட் வெஸ்ட், NSW 2138 அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த திருமதி பௌலிணி ஜெனிஃபர் குணவர்தன திருமணத்திற்கு முன் டீ சில்வா என்பவருக்கும் இல. 45, ப்ரேப்ரூக் வீதி, கொழும்பு 2 ஐச் சேர்ந்த டவ்ன் திரேஸ் ஏக்கநாயக்க என்பவருக்கும் என்னால் பெப்புருவரி ஆறாம் திகதி எம்.எப். ஸ்ப்ரோல் பிரசித்த நொத்தாரிசுவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 3974 சிறப்பு அற்றோணித் தத்துவப் பத்திரத்தால் வழங்கப்பட்டதுமாகிய அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

லக்ஷ்மன் குணவர்தன.

2020, ஓகத்து 14.

8-662

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், இல. 77/1A, பான்ஸ் பிளேஸ்,கொழும்பு 7 ,தற்போது இல. 19,ஹொஸ்பிட்டல் ரோட், கொன்கோட் வெஸ்ட், NSW 2138 அவுஸ்திரேலியாவில்

வசிக்கும் திருமதி பௌலிணி ஜெனிஃபர் குணவர்தன திருமணத்திற்கு முன் டீ சில்வா ஆகிய நான், அறிவித்துக் கொள்ளும் விடயம் என்னவெனில்,இல. 45, ப்ரேப்ரூக் வீதி, கொழும்பு 2 ஐச் சேர்ந்த டவ்ன் திரேஸ் ஏக்கநாயக்க என்பவருக்கு 2013, பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி எம். எப். ஸ்ப்ரோல் பிரசித்த நொத்தாரிசுவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 3975 கொண்ட சிறப்பு அற்றோணித் தத்துவத்தால் என்னால் வழங்கப்பட்டதுமாகிய அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பௌலிணி ஜெனிஃபர்
குணவர்தன (எ) டீ சில்வா.

2020, ஓகத்து 14.

8-663

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

யாழ்ப்பாணம், சங்கத்தானை, சப்பாச்சி மாவடியைச் சேர்ந்த கனகரட்ணம் கணேசநாதன் (473305437V) மற்றும் மனைவியான சந்தனா வடிவாம்பிகை (545392461X) ஆகிய நாம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் 2020.02.09 ஆந் திகதியன்று அறிவித்துக் கொள்வதாவது, எமது சார்பாக எமது வர்த்தக மற்றும் விவகாராங்களில் முகாமைத்துவம் பண்ணவும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளவும், எமது சட்டரீதியான உண்மையான அற்றோணியாக செயற்பட அதிகாரம் பெற்ற இலங்கை, யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு வீ. கௌதமன் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, 2019.07.16 ஆந் திகதியிடப்பட்டு , இலங்கை, வட்டுக்கோட்டை, கல்லூரி வீதியைச் சேர்ந்த சிதம்பரம் மோகன் (603314530V) என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோணித்தத்துவம் 2020, பெப்புருவரி 09 ஆந் திகதியன்று செயல்வலுப்பெறும் வகையில் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டது. மேற்படி விசேட அற்றோணித்தத்துவமானது யாழ்ப்பாணம் உதவிப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் 122/ 67 அத்தியாயம்/பக்கத்தில் நாட்புத்தக இலக்கம் 434/2019.07.25 மீது, எழுத்து மூல அதிகார பதிவில் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டதாகும். சாட்சியாளர்களாக, 2010.02.09 அன்று கீழே நாம் கையொப்பமிட்டுள்ளோம்.

1. கனகரட்ணம் கணேசநாதன். 2.சந்தனா வடிவாம்பிகை.

8-664

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பத்தரமுல்லை, பன்னிப்பிட்டிய வீதி, இல. 120, 120ஏ என்ற முகவரியில் பதிவு அலுவலகத்தை நடத்திச் செல்லும் பதிவு இலக்கம் பிபீ 82, எசட்லைன் லீசிங் கம்பனி லிமிட்டட் ஆகிய எம்மிடம், யக்கல, விக்கிரமாரச்சி வீதி, இல. 27/ 28 இல் வசிக்கும் தே.அ.அ.இல. 828091778V கொண்ட நாலினி வத்சலா எலெக்சான்டர் என்பவரால் பகிரங்க நொத்தாரிசு எச். ஏ. சீ. ஹத்துருசிங்ஹவினால் 2018.11.21 ஆந் திகதி உறுதி செய்யப்பட்ட இல. 6235 எனும் இரத்துச் செய்ய முடியாத அற்றோணித் தத்துவத்தில் அற்றோணித் தத்துவகாரராக நியமித்து வழங்கப்பட்ட அந்நியமனம் அங்கு குறிப்பிடப்படும் இரத்துச் செய்யும் உரிமையின் பிரகாரம் எம்மால் இரத்துச் செய்வதாகவும், அது இனிமேல் செல்லுபடியாகும் ஆவணம் ஆகாது எனவும் இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

எசட்லைன் லீசிங் கம்பனி லிமிட்டட்.

8-687

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹோமாகம, உடுவன, தெல்கஹவத்த, பிரசன்னபுர, இல. 141/ 2/ டீ எனும் முகவரியில் வசிக்கும் ரஞ்ஜித் செனரத் யாபா ஆகிய நான், (தே.அ.அ.இல. 761740215V), நுகேகொடை, கங்கொடவில, சோரத மாவத்தை, இல. 111/10, எனும் முகவரியில் வசிக்கும் மஞ்ஜுல நிலந்த செனரத் யாபா ( தே.அ.அ.இல. 910322370 V) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். டபிள்யூ. ஜயதிலக்க என்பவரால் 2018.06.29 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு 5788ஆம் இலக்கமுடைய அற்றோணித்தத்துவப் பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக மற்றும் அற்றோணித்தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

ரஞ்ஜித் செனரத் யாபா.

8-689

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹோமாகம, உடுவன, தெல்கஹவத்த, பிரசன்னபுர, இல.141/2/டீ எனும் முகுவரியில் வசிக்கும் ரஞ்ஜித் செனரத் யாபா ஆகிய நான், இலங்கைக் கடவுச் சீட்டு இல. N 3507566) பெரலபனாதர, பட்டிகல, கொடேஹேன வில் வசிக்கும் மஞ்ஜுல நிலந்த செனரத் யாபா (தே.அ.அ.இல.910322370V) மற்றும் இலங்கைக் கடவுச்சீட்டு இல. N 5338273) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். டபிள்யூ. ஜயதிலக்க என்பவரால் 2016.08.06 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு 5703ஆம் இலக்கமுடைய அற்றோணித்தத்துவப் பத்திரத்தின்

மூலம் வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக மற்றும் அற்றோணிதத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

ரஞ்ஜித் செனரத் யாபா.

8-690

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

No. 02,Simtat Hadayyagim, Mikhmoret, Israel, (Postal code 40297) எனும் முகவரியில் தற்போது வசிக்கும் கஹடபிடியகே பிரியா தீப்தி ஆமர் பெரேரா ஆகிய நான், மஹரகம,கொடிகமுவ, பிலியந்தல வீதி, இல. 177/15 எனும் முகவரியில் வசிக்கும் வெலிவிட்டிய சாயக்காரகே திலினி நிசங்சலா யஹம்பத் என்பவருக்கு பத்தரமுல்ல, பட்டபத, நுகதெனிய வீதி, இல. 367F எனும் முகவரியில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு யூ. விஜேரத்ன என்பவரால் 2014.05.05 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு 5894 ஆம் இலக்கமுடைய அற்றோணித்தத்துவப் பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாகவும் 2020.08.14 ஆந் திகதியிலிருந்து அற்றோணித்தத்துவக்காரரான வெலிவிட்டிய சாயக்காரகே திலினி நிசங்சலா யஹம்பத் என்பவரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக்கொள்கின்றேன்.

கஹடபிடியகே பிரியா தீப்தி ஆமர்
பெரேரா.

2020.08.14.

8-705

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 03, பெல்மைரா மாவத்தை, இல.8, (தற்போது கோட்டே, எதுல் கோட்டே, கொட்டுபெம்ம வீதி, இல. 167) எனும் முகவரியில் வசிக்கும் அனில் கேஷர டெனிஸ்டர் சேரசிங்ஹ ஆகிய நான் (தே.அ.அ.இல. 196207503289) பெலிஅத்த, தம்முல்ல, போகஹ வலவ்வ எனும் முகவரியில் வசிக்கும் ஜயசேன கண்டம்பி என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசி விதுர பத்ரஜித் ரத்னாயக வீரகோன் என்பவரால் 2007.04.28 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1004 ஆம் இலக்கமுடைய விசேட அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக மற்றும் அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக்கொள்கிறேன்.

அனில் கேஷர டெனிஸ்டர்
சேரசிங்ஹ.

8-704

---

### பொது அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 372, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சங்கரப்பிள்ளை கைலாசப்பிள்ளை (தே.அ.அ.இல. 502131362V) ஆகிய நான், அதே இடத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி கார்த்திகா கைலாசப்பிள்ளை (தே.அ.அ.இல. 857551508 V) என்பவருக்கு 2018.03.16 இல் பிரசித்த நொத்தாரிசு A.S. புனித சேகரன் முகதாவில் அத்தாட்சிப்படுத்திய 340 ஆம் இலக்க பொது அற்றோணித் தத்துவத்தால் அற்றோணித் தத்துவம் வழங்கப்பட்டு பதிவாளர் திணைக்களத்தில் நாட்பதிவேட்டு இலக்கம் 5183 இன் கீழ் 97ஆம் இலக்கப் புத்தகத்தில் 229ஆம் பக்கத்தில் 2018.03.22ஆந் திகதி பதிவு செய்யப்பட்டது. மேற்சொல்லப்பட்ட பொது அற்றோணிப் பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

சங்கரப்பிள்ளை
கைலாசப்பிள்ளை.

8-709

---

### விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 35- 5/6, பொஸ்வெல் பிலேஸ், கொழும்பு 6 எனும் முகவரியில் (தற்போது சுவிட்சர்லாந்தில் ) வசிக்கும் செல்லதுரை விவேகானந்தன் ( தே.அ.அ.இல. 197314703820 ) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு வீரய்யா விவேகானந்தன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 5207 மற்றும் 2019.02.22 ஆந் திகதிய விசேட அற்றோணித்தத்துவத்தினால் இல. 93 , மஹவித்தியாலய மாவத்தை, கொழும்பு 13 எனும் முகவரியில் வசிக்கும் கனகலிங்கம் அகிலன் (தே.அ.அ.இல. 198419301769) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவத்தை 2020.08.19 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்வதாக இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

வீரய்யா விவேகானந்தன்- சட்டத்தரணி,
செல்லதுரை விவேகானந்தனுக்குப்
பதிலாக.

8-712

# ஏல விற்பனைகள்

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

உபாலி மோட்டார்ஸ்
கணக்கு இலக்கம் : 0213 1000 0679

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.10.31 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2020.08.14 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2020.07.31ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே முப்பத்தி எட்டு இலட்சத்து அறுபத்து ஏழாயிரத்து அறுநூற்று ஐம்பத்தி ஒரு ரூபா இரண்டுசதம் (ரூபா 1,38,67,651.02) 2019, ஒற்றோபர் 15 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே முப்பத்து மூன்று இலட்சத்து முப்பத்து ஓராயிரம் ரூபா (ரூபா 1,33,31,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினேழு வீதம் (17%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலங்கங்கள் 2410, 2638 மற்றும் 2896 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளின் குத்தகை உரிமைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவர் மூலமாக 2020.09.24 ஆந் திகதி மு.ப. 11.00 மணிமுதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம்,தெற்கு கட்டானை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் உதம்மிட்ட கிராம அலுவர் பிரிவின் உதம்மிட்ட கிராமத்தில் அமைந்த "மீகஹாவத்த, பக்மீகாஹாவத்த, தெலம்புகாஹாவத்த, கதுர்காஹா எனும் அம்பாகாஹாவத்துகொடச, மீகாஹா வத்து கொடச, கந்துருகாஹாவத்த, மீகாஹாவத்த, மீகாஹா கும்புரவிற்கு அருகில் மிகாஹாவத்த எனும் ஓவிட்ட பிம" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையார் கே.ஈ.ஜே.பீ.பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, சனவரி 21 , இல. 9252 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: பியட்றிஸ் கருணாரத்னவின் காணி;கிழக்கு: டபிள்யூ. குணதாச சில்வாவின் இக் காணியின் எஞ்சிய பகுதி; தெற்கு: ஏ. டீ. சுமணதுங்கின் காணி மற்றும் மேற்கு: பிரதேச சபை வீதி, ஆகிய இவ் எல்லைக்குள் அமைந்த காணியின்விஸ்தீரணம் இருபத்தி ஆறு தசம் ஐந்து பேர்ச் (0ஏ.0றூ.26.5 பே.) கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 9252 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட காணி நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

கூறப்பட்ட உதம்மிட்ட கிராமத்தில் அமைந்த "மீகஹாவத்த, பக்மீகாஹாவத்த, தெலம்பூகாஹாவத்த, கதுர்காஹா எனும் அம்பாகாஹாவத்துகொடச, மீகாஹாவத்து கொடச, கந்துருகா ஹாவத்த, மீகாஹாவத்த, மீகாஹா கும்புரவிற்கு அருகில் மிகாஹாவத்த எனும் ஓவிட்ட பிம" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையார் கே.ஈ.ஜே.பீ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1989, மே 18 , இல. 1434 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: பியட்றிஸ் கருணாரத்னவின் காணி;கிழக்கு: டபிள்யூ. குணதாச சில்வாவின் இக் காணியின் எஞ்சிய பகுதி; தெற்கு: ஏ. டீ. சுமணதுங்கவின் காணி மற்றும் மேற்கு: கிராம சபை வீதி, ஆகிய இவ் எல்லைக்குள் அமைந்த காணியின் விஸ் தீரணம் இருபத்தி ஆறு தசம் ஐந்து பேர்ச் (0ஏ.0றூ.26.5 பே.) கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1434 எனும் வரைபடத்திற்கு அமைவாக நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் பரிமாணம் / பக்கம் H 164/119 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8- 670

---

## நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீ.எல்.சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடல் ( விசேட ஏற்பாடுகள்) 9 ஆவது பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

பிணைப்படுத்தியவர்களாகிய அப்துல் வாஹிட் மொஹமட் புவட் பாரூக் என்றும் அழைக்கப்படுகின்ற அப்துல் வாஹிட் மொஹமட் பியாட் பாரூக் மற்றும் பாத்திமா பெரோஸா என்றும் முன்பு அழைக்கப்படுகின்ற மதுரகே நிரோஷா நிசாந்தி மற்றும் அடமானதாரராகிய அப்துல் வாஹிட் மொஹமட் புவட் பாரூக் என்றும் அழைக்கப்படுகின்ற அப்துல் வாஹிட் மொஹமட் பியாட் பாரூக் என்பவருக்காக நீர்கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஈ.எம். என். ஏக்கநாயக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, பெப்புருவரி 16 ஆந் திகதி 6547 ஆம் இலக்கம் மற்றும் நீர்கொழும்பைச் சேர்ந்த

பிரசித்த நொத்தாரிசு ஈ.எம். என். ஏக்கநாயக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017, ஆனி மாதம் 03 ஆந் திகதிய 9038ஆம் இலக்க ஈட்டு முறிகள் மூலம் இதனுடனுள்ள அட்ட வணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளுக்காக ஈடாக மற்றும் அடை மானமாக , இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 ஐச் சேர்ந்த நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ இன் சார்பில் அப்துல் வாஹிட் மொஹமட் புவட் பாரூக் என்றும் அழைக்கப்படுகின்ற அப்துல்வாஹிட் மொஹமட் பியாட் பாரூக் மற்றும் பாத்திமா பெரோஸா என்றும் முன்பு அழைக்கப்படுகின்ற மதுரகே நிரோஷா நிசாந்தியினால் பெறப்பட்ட நிதிவசதிகளின் உரிய மீள் கொடுப்பனவுக்கு பிணையாக வைத்த சொத்துக்கள்.

அப்துல் வாஹிட் மொஹமட் புவட் பாரூக் என்றும் அழைக்கப்படுகின்ற அப்துல் வாஹிட் மொஹமட் பியாட் பாரூக் மற்றும் பாத்திமா பெரோஸா என்றும் முன்பு அழைக்கப்பட்ட மதுரகே நிரோஷா நிசாந்தி என்பவர்களால் திரும்பச் செலுத்துவதற்காக அடைமானமாக வைப்பிலிடப்பட்டு திரும்பச் செலுத்த தவறிய ஈடு வைக்கப்பட்ட சொத்து.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்புப் பதிவுப் பிரிவின் அத்துகோரள தாசிய பத்து நீர்கொழும்பு நகர சபை பிரிவுக்குட்பட்ட பிரதேச செயலாளர் பிரிவின் பிட்டிபன இல. 162 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பிட்டிபனவில் அமைந்துள்ள மிதெல்லகஹாவத்த என்றழைக்கப்படுகின்ற ஒன்றிணைக்கப்பட்ட தொடர்காணிகள் E1 மற்றும் E2 ஒன்றிணைக்கப்பட்ட காணியின் கட்டடங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அங்கு காணப்படும் அனைத்துடன் பதினேழு தசம் மூன்று பேர்ச் (0ஏ.0றூ.17.3பே.) விஸ்தீரணத்தையும் கொண்டுள்ளது. இது G 155/68 இன் கீழ் பதியப்பட்டுள்ளது.

இதன் வீதிக்கான அதன் மேலாகவும் அதனூடாகவும் வழிமுறை நிலவரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் எடுக்கப்பட்ட நிலவரைபடத்தின் விபரம் பின்வருமாறு.-

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்புப் பதிவுப் பிரிவின் அத்துகோரள தாசிய பத்து நீர்கொழும்பு நகர சபை பிரிவுக்குட்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் பிட்டிபன இல. 162 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பிட்டிபனவில் அமைந்துள்ள மிதெல்லகஹாவத்த என்றழைக்கப்படுகின்ற ஒன்றிணைக்கப்பட்ட காணி கட்டடங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அங்கு காணப்படும் அனைத்துடன் பதினாறு பேர்ச் (0ஏ.0றூ.16பே.) விஸ்தீரணத்தையும் கொண்டுள்ளது.

அண்மையில் எடுக்கப்பட்ட நிலவரைபடத்தின் விபரம் பின்வருமாறு.-

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்புப் பதிவுப் பிரிவின் அத்துகோரள தாசிய பத்து நீர்கொழும்பு நகர சபை பிரிவுக்குட்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் பிட்டிபன இல. 162 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பிட்டிபனவில் அமைந்துள்ள மிதெல்லகஹாவத்த என்றழைக்கப்படுகின்ற காணித்துண்டு 1 ஒன்றிணைக்கப்பட்ட காணி கட்டடங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அங்கு காணப்படும் அனைத்துடனும் பதினாறு பேர்ச் (0ஏ.0றூ.16பே.) விஸ்தீரணத்தையும் கொண்டுள்ளது.

மேலே விபரிக்கப்பட்டுள்ள சொத்து 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17ஆந் திகதி முற்பகல் 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் என்னால் விற்பனை செய்யப்படும்.

**காணிக்கு செல்லும் விதம்**.- நீர்கொழும்பு மத்திய நகரத்திலிருந்து மாங்குளிய வீதியால் அல்லது பமுனுகம வீதியால் சுமார் 3.9 கி.மீ. தூரம் வரை சென்று அலுத்குருவ கலப்பு தீவரபுர வீதியை அடைந்தால் கூறப்பட்ட சொத்து இடது கைப்பக்கத்தில் முன்னனியில் இருக்கும். குறிக்கப்பட்ட சொத்து மாங்குளிய வீதியிலிருந்து 130 மீற்றரிலிருந்து 140 மீற்றர் வரை இதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் வலது பக்கத்தில் இருக்கும். இதன் வரிமதிப்பீட்டு இல. 24, அலுத்குருவ கலப்புதீவரபுர வீதி.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.-வெற்றிகரமான கொள்வன வுதாரர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும். :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் 10%;
(2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி ஒரு வீதம் 1%;
(3) ஏல விற்பனையாளர் கட்டணமாக இரண்டரை சதவீதம் (2.5%);
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 3000 ;
(5) இலகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 1500;
(6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு ;
(7) கொள்வனவு விலையின் மிகுதி 90% இலங்கை அரசினால் விதிக்கப்பட்ட வரிகள் விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தல் வேண்டும் .

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதி தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

**ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை** பிரத்தியேக முகாமையாளர், - சட்டத்துறை, நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ, இல.242, யூனியன் பிளேஸ், கொழும்பு-02, என்ற முகவரியில் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி இல.: 011-4218742.

மேலே உள்ள ஏல விற்பனையை வங்கியினால் முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்யவும்/இடைநிறுத்தவும் முடியும்.

M.H.T. கருணாரத்ன, (ச.நீ.)
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி என்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ.
தொலைபேசி இல. : 011- 3068185, 2257 2940.

8- 608

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. —களனி கிளை**

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி )

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஏல விற்பனை*

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு யூ.எஸ். கே. ஹேரத் அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்தபட்ட 2017, நவெம்பர் 10 ஆந் திகதியிடப் பட்ட TR. 50 ஆம் இலக்க பிணை முறி மூலம் கன்னகொட கமகே கோசல மதுசங்க என்பவர் பெற்றுக்கொண்ட கடனை செலுத் தத் தவறியுள்ளமையால், அந்தக் கடன் ஏனைய கொடுப்பனவு மற்றும் ஏல விற்பனை கட்டணம் என்பவற்றை மீள அறவிடப்படும் பொருட்டு.

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.இனால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆதனம் 2020, ஒற்றோபர் மாதம் 13ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் ஏல விற்பனைசெய்யப்படும்.**

மேல் மகாணத்தின், கம்பஹா மாவட்டத்தில் மஹர பிரதேச செயலாளர் பிரிவில் சூரியபாலுவ தெற்கு கிராம அலுவலர் பிரிவில் சூரிய பாலுவயில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் அத்தாட்சிப்படுத்திய கடஸ்திரல் வரைபடத்தின் 4ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள லொட் 0218, காணியின் விஸ்தீரணம் பூச்சியம் தசம் பூச்சியம் நான்கு எட்டு இரண்டு ஹெக்டயார் (0.0482 ஹெக்டயார்) கொண்ட விசாலமான காணி மற்றும் அங்கு காணப்படுகின்ற மரம், இலைகுழை, பழங்கள் மற்றும் கட்டிடங்கள் அனைத்தும் உட்பட.

நில அளவையாளர் நாயகத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 510821 கொண்ட கடஸ்திரல் வரைபடத்தின் லொட் 118 மற்றம் 217 எனக் குறித்து வேறு படுத்தியுள்ள வழியினூடாகவும் அதன் நெடுகிலும் உரித்துடையதாகும்.

**மேலதிக விபரங்களுக்காக.**- 2020.01.31 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2020.07.31 ஆந் திகதிய ''மௌபிம'', ''டெயிலி மிரர்'', மற்றும் ''தினக்குரல்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- கொழும்பிலிருந்து பேலியகொடையை நோக்கி வரும் போது பின்பு கண்டி வீதியினூடாக கிரிபத்கொட, கடவத்தை ஆகிய பிரதான நகரங்களைக் கடந்து எல்தெனிய தேவாலயத்தை அடைய முன் 150 மீ. தூரம் சென்று சேதமாவத்தையை அடைய இடது புறமாகத் திரும்பி முச்சந்தியை அடைந்து 300 மீற்றர் முன்நோக்கி பயணித்து வலது புறம் அவ்வாதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சத வீதம்);
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சத வீதம்) ;
(3) விற்பனை விலையின் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்);
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1000 ரூபா;
(5) விற்பனைச் செலவு மற்றும் ஏனைய கட்டணங்கள் (எவையேனும் இருப்பின்);
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ யில் செலுத்தவேண்டும்.

" பொது முகாமையாளர்-அறவிடல்'', ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ., இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10'' எனும் முகவரியில் செலுத்த வேண்டும்.

தொலைபேசி இல.: 011-2661866 .
தொலைநகல் இல. :011-2661828.

உரித்து உறுதிகள் மற்றும் ஏனைய விபரங்களை மேற்குறிப்பிட்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட தொகை முப்பது (30) நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் தற்போது செலுத்தியுள்ள தொகையில் 10% வீதத்தை மீண்டும் செலுத்தாமல் இருப்பதற்கும், ஆதனத்தை மீள் விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு பூரண உரிமையுண்டு.

ஈ.எஸ். ராமநாயக்க,
நீதிமன்ற ஆணையாளர்,
உத்தரவுபெற்ற ஏலவிற்பனையாளர்
மற்றும் மதிப்பீட்டாளர்,
சமாதான நீதவான் (தீவு முழுவதற்கும்).

இல. 11/55, போகஹவத்த,
குடாபுத்கமுவ, அங்கொடை.
தொலைபேசி: 011- 2053286, 072- 3207533,
076- 9217329, 072- 0881044.

8- 658